முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1088

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.09.2022**, புதன்கிழமை

1. ஆறுமுகன் என் மகா சக்தியே
அழிவை தடுக்க வந்த தவசித்தியே
மாறுதலை கலியினிலே செய்து முடித்து
மக்களை காப்பேன் என வந்த தயாபரனே
2. தயாபரனே தர்மத்தின் தலைவனே
தவராஜனே ஆறுமுக அரங்கனே
தயவோடு முருகப்பெருமான் யானும் உமக்கு
தக்கதொரு ஞான அறிவுரை ஆசி தன்னை
3. ஆசி தன்னை சுபகிருது நங்கை திங்கள்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 04 நாள், 21.09.2022 புதன்கிழமை)
அருளுவேன் அரங்கனுக்கு இன்னும் ஆற்றல் கூட
வாசி வென்ற தலைவர்களெல்லாம் சூட்சுமமாக
வணங்கி உன் தர்மத்துள் கலந்து நிற்க
4. நிற்கின்ற இந்த ஓங்காரக்குடில் சபை
நிலவுலகை ஆளுகின்ற நீதி சபையாகும்
ஏற்கின்ற மக்களுக்கு அழிவில்லை
இணைந்து தொண்டு செய்கின்ற மக்களுக்கு இனி பிறவி இல்லை
5. பிறவாத ஞானத்தை பிரம்ம சூட்சுமமாக
பிரணவக்குடிலில் ஆறுமுகன் யான் வைத்துள்ளேன்
அறமென உலகோர் வந்து சேர்ந்து அரங்கனின் திருவடி பற்றிகொண்டு
வரம்தா என்று வணங்கி நித்தம் வையகத்தில் தொடர் பயணம் செய்தால் போதும்
6. போதுமப்பா அவர்களெல்லாம் புண்ணியத்தால்
பூவுலகில் ஞானிகள் ஆவது உறுதி உறுதி
ஆதரவாய் ஆறுமுகன் அரங்கனோடு இருக்க
அன்பர்கட்கு பிற அலைச்சல் தேவை இல்லை
7. தேவையோடு அரங்கன் தொடர்பு கூட்டி
தொடர்ந்து வந்து என் நாமஜெபத்தோடு
தடையின்றி தர்மத்தில் உதவி நின்றால்
தரணியில் கோடி கோடி ஞானியர்கள்
8. ஞானியர்கள் அரங்கனால் உருவாக்கப்பட்டு
நிலவுலகம் ஞான லோகமாகக்கூடும்
தரணிஎங்கும் தர்ம ஞான ஆட்சியாக
தவராஜன் வழிகாட்டலில் சித்தியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–